# செந்தமிழ்

தொகுதி :95 திருவள்ளுவர் ஆண்டு 2032 செப்டம்பர் 2001 பகுதி : 9

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டா. ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். கு. துரைராசு
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
பேரறிஞர். அ.மா. பரிமணம்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |


மதிப்புறு ஆசிரியர் :

**இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்

1. பெரியபுராணம் ஓர் வழிகாட்டி நூல் .....301
டாக்டர் நிர்மலா மோகன்

2. மகாகவி பாரதியாரின் சுயசரிதை .....310
முனைவர் தெ. திருஞானமூர்த்தி

3. மறக்கப்பட்ட மனித நேயம்! .....317
சு.கு. பன்னீர் செல்வம்

4. தருமபுர ஆதீனப் பன்னிரு திருமுறை
வெளியீடு - ஒரு பார்வை II
வித்துவான் தா. குருசாமிதேசிகர் .....325

5. ஓர் இயற்றமிழ் மாணவனின்
கல்வெட்டுப் பார்வை - 1
அ.மா. பரிமணம் .....334

# பெரியபுராணம் ஓர் வழிகாட்டி நூல்

பண்டைக்காலந்தொட்டே தமிழகம்- தமிழினம் சமயநெறியைக் கண்டும் அந்நெறியில் நின்று ஒழுகிப் பண்பட்டும் வந்துள்ளது. "வாழ்க்கைக்கு நெறியும் முறையும் உண்டு; வாழ்க்கை லட்சிய நோக்குடையது. குறிக்கோளில்லாத வாழ்க்கை கூடைச்சாம்பலுக்கே; குறிக்கோளுடன் கூடிய வாழ்க்கையே குவலயம் போற்றும் வாழ்க்கை என்று வாழ்க்கைக்கொரு சிறப்பான குறிக்கோளைச் சமயநெறிவழியாகத் தந்து மனித வாழ்க்கையை வளப்படுத்திய மொழியும் தமிழே" என்கிறார் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் (பெரியபுராணச் சொற்பொழிவுகள், ப.10). பரிபாடல், திருமுருகாற்றுப்படை, தேவாரம், திருவாசகம், திவ்யபிரபந்தம், திருப்புகழ், திருவருட்பா என்று கடவுள் வழிபாட்டைக் கல்லும் கரையும் வண்ணம் எடுத்துக்கூறும் பனுவல்கள் பற்பல காலந்தோறும் தோன்றித் தமிழ் மொழியையும், தமிழ்மக்களையும் பக்குவப்படுத்தி வந்துள்ளன. அறிஞர் தனிநாயக அடிகள் குறிப்பிடுவது போல், "ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், ஜெர்மன் தத்துவத்தின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலியம் காதலின் மொழி என்றும் கூறுவது ஒருபுடை ஒக்கும் எனின், தமிழ் 'இரக்கத்தின் மொழி' எனக்கூறுவது இனிது பொருந்தும்; 'பக்தியின் மொழி' எனலுமாம்" (தமிழ்த்தூது, ப. 34). இத்தகைய விழுமிய பக்திநெறியில் தலைநின்று, வாழ்க்கையின் குறிக்கோளைச் செம்மையாக நிறைவேற்றியவர்கள் இறையடியவர்கள். இவ்வடியவர்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறியைச் சுட்டி, இஃது ஒரு வழிகாட்டி நூலாக விளங்குவதை எடுத்துக்காட்டும்வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

'நாலுபேர் நடந்த வழியில் நட' என்பது இன்றும் பேச்சுவழக்கில் வழங்கும் சொலவடை. நாலுபேர் என்பது சைவ சமயத்தின் தூண்களாக விளங்கிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரைக் குறிக்கும். 'காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி' இறைவனை வழிபட்டவர்கள் அவர்கள். இறைவனை அடைய அவர்கள் காட்டிய வாழ்க்கை நெறிகள் நான்கு. அவையாவன :

நன்மகன்மை நெறி (சத்புத்ர மார்க்கம்)
தொண்டு நெறி (தாச மார்க்கம்)
தோழமை நெறி (சக மார்க்கம்)
யோக நெறி (ஞான மார்க்கம்)

ஆகியன ஆகும். சமணம், பௌத்தம், காளாமுகம் எனப் பல்வேறு மதங்கள் தோன்றி, மக்களைக் குழப்பிக் கொண்டிருந்த சூழ்நிலையில், 7ஆம் நூற்றாண்டில் தோன்றிய திருஞானசம்பந்தரும், அப்பரும் ஊர் ஊராகச்சென்று, கோயில்தோறும் இறைவனை வழிபட்டு வணங்கி, பாடல்கள் பாடி மக்களை ஒன்றிணைத்தனர். செல்வாக்கிழந்த சைவ சமயத்தை மீண்டும் நிலைநிறுத்திய கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றனர். அவர்களைப் பின்பற்றிய அடியவர்கள், இறைவனுக்குத் தொண்டு செய்தல், இறையடியவர்களுக்குத் தொண்டு செய்தல் என்று ஏதேனும் ஒரு குறிக்கோளைத் தம் வாழ்வியல் நெறியாகக் கொண்டு ஒழுகினர். வாழ்க்கையின் குறிக்கோளைச் செம்மையாக நிறைவேற்றிய இறையடியார்களின் வரலாற்றை இனிதே எடுத்துரைப்பதுதான் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம். பெரியபுராணத்தை, 'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவர்' சேக்கிழார் ஆவார்.

இடைக்காலத்து இலக்கியங்களில், நாட்டுமக்களின் வாழ்க்கைபற்றி அறிவிக்கும் வழிகாட்டி நூலாக விளங்குகிறது பெரியபுராணம். சேக்கிழார் காட்டும் இறையடியார்கள், தம் மேனி மேல்

பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்; அவர்கள் ஐம்பூதங்கள் தம் நிலையிற் கலங்கினாலும் மாதொரு பாகம் மலர்த்தாள் மறவாதவர்கள்; 'கோதிலாத குணப்பெருங் குன்றனையவர்' 'ஈர அன்பினர்' 'ஈசன் பணி அல்லது ஒன்று இலர்' பக்தி வழிபாடு தவிர முத்தியையும் மதித்து நாடாத பெருமிதமான மனப்பான்மை உடையவர்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால்,

'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'

என்று அவர்களைப் போற்றிப் பாடுகின்றார் சேக்கிழார். இத்தகைய அடியவர்களைப் பாடும் பெரியபுராணம். இவ்வடியவர்களின் வழி, சமுதாயத்திற்கு மனிதனுக்கு வாழும் நெறிமுறைகளைக் காட்டிச் செல்கின்றது. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு- வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு - உரிய வழிமுறைகளைக் கூறிச் செல்கின்றது.

பெரிய புராணத்தின் உயிர்நாடி

பெரியபுராணம் காட்டும் அடியவர்கள் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் அல்லர்; ஒரே ஊரில் வாழ்ந்தவர்கள் அல்லர்; ஒரே பிரிவினைச் சேர்ந்தவர்களும் அல்லர்; அப்பட்டியலில் ஆண்டியும் உண்டு; அரசனும் உண்டு; பெரும் வணிகர்களும் உண்டு; மண் ஓடு செய்து கொடுத்து வாழும் எளிய வணிகரும் உண்டு; பல்வேறு தொழில் செய்கிறவர்கள் உண்டு; அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், சூத்திரர் எனப் பல்வேறு சாதியினரும் உண்டு; இவர்கள் அனைவரும் சிவனடியார்கள். சிவன்மீது பற்றுக்கொண்டவர்கள் என்னும் ஒற்றுமையைத் தாண்டி, மற்றொன்றும் இவர்களைப் பிணித்து வைத்துள்ளது. அதுதான் குறிக்கோள்; ஒவ்வொரு சிவனடியாரும் ஒரு குறிக்கோள் உடையவராக விளங்குகிறார்கள். ஒவ்வொரு அடியவரும் தாம் தாம் ஏற்றுக்கொண்ட தொண்டை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும்' அதற்கு இடையூறு நேர்ந்தால் உயிரைக்கொடுத்தாவது குறிக்கோளை நிறைவேற்ற வேண்டும்

என்ற முனைப்புக் கொண்டவராக விளங்குகின்றனர். அண்மையில் குறள்பீட விருதுபெற்ற அறிஞர் அ.ச. ஞானசம்பந்தன் குறிப்பிடுவதுபோல் "பெரியபுராணத்தில் பக்தியும் உண்டு என்றாலும் சமயமும் உண்டு. இவை அனைத்தையும் தாண்டி மனிதன் மனிதனாக வாழவேண்டுமானால் குறிக்கோள், இறையுணர்வு, தொண்டு என்ற மூன்றும் வாழ்வில் தலைதூக்கினாலன்றி ஓரினம் சிறந்த வாழ்வைப்பெறமுடியாது என்பதே பெரியபுராணத்தின் உயிர்நாடியாக விளங்குகிறது" (சேக்கிழார் தந்த செல்வம், முன்னுரை, ப. 5) என்பது சாலப்பொருந்தும்.

அன்புநெறி

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்திலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே'

எனப் பாடினார் திருமூலர்.

'நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்குஎன்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் உடையானே'

என்றார் மாணிக்கவாசகர்.

'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே' என்று பாடினார் வள்ளலார். இறையடியவர்கள் - எந்நிலையில் உள்ளவராயினும், எக்குலத்தில் பிறந்தவராயினும் எல்லோரையும் இணைத்து நின்றது அன்புநெறி ஒன்றே ஆகும். இறைவன் மீது கொண்ட அன்பு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு அமைந்தது பெரியபுராணம். வேடவராயினும், புலையராயினும், பாணராயினும், குயவராயினும், வண்ணாராயினும் எல்லோரும் இறைவன் முன்பு சமம் என்பதை எடுத்துக்காட்டுவது பெரியபுராணம். உள்ளத்தில் உள்ள அன்பேயன்றிப் புறத்தோற்றங்கள் எதுவும் இறையன்புக்குத் தடை ஆகா எனக்காட்டியது பெரியபுராணம்.

'வெட்டு, குத்து, கொல்லு' என நாளும் வாழும் வேடர்குலத்தில் பிறந்த கண்ணப்ப நாயனார், மலையில் குடுமித்தேவர் என்று அழைக்கப்பட்ட சிவபெருமானைக் கண்டவுடன் காதலாகி (வங்கினைப்பற்றிப் போதா வல்லுடும்பென') அவர்மீது பற்றுக் கொண்டு, பிற எல்லாவற்றையும் மறந்துவாழ முற்படுகின்றார். தமக்கு எவ்வளவு துன்பம் நேர்ந்தாலும் தாங்கிக்கொள்ளும் தாய், தன் குழந்தைக்கு ஒரு துன்பம் நேர்ந்தாலும் துடிக்கின்ற துடிப்பைப்போன்றே கண்ணப்பரின் செயலும் விளங்குகிறது. இறைவனுக்காகவே மான், பன்றி, கடமை, ஆமா முதலான விலங்குகளை வேட்டையாடுகிறார்; இறைச்சியைச் சுட்டுப் பதம்பார்த்துக் கல்லையில் எடுத்துக்கொள்கிறார். இறைவனுக்கான மலரைத் தலையில் தாங்கி, அவரை நீராட்ட நீரை வாயிலும் நிரப்பிக்கொண்டு, வாது அன்பு உமிழ்வார் போல் அந்நீரை உமிழ்கிறார். அவர் வலது கண்ணிலிருந்து குருதி வழிவதைக் கண்டு, தம் வலதுகண்ணையே இடந்து அப்புகிறார். இடதுகண்ணிலும் குருதி வழிவதைப் பார்த்தவுடன், தம் இடது கண்ணையும் தோண்ட முற்படுகிறார். தாயினும் சாலப்பரிந்து, அவர் செய்யும் செயலை,

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையில் வாறறிநீ என்றருள் செய்வார்"(பா. 157)

என்று இறைவனே சிவகோசரியாருக்குக் கூறுவதாகக் குறிப்பிடுகிறார் சேக்கிழார். அதனால்தான் மாணிக்கவாசகர், திருக்கோத்தும்பியில் கண்ணப்பரது அன்பையே அன்பின் மேல் எல்லையாக வரையறுத்துக் கூறுகின்றார்.

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்

சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ"

(திருக்கோத்தும்பி, பா.4)

என்று 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு தமக்கு இல்லையே' என்று குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

பெரிய புராணம் அன்பு நெறியே இறைவனை அடையும் நெறி என்பதை அழுத்தமாக எடுத்துரைக்கும் உயர்ந்த சமய நூல் ஆகும். கடவுளை நம்புதல், இன்ப அன்பே தவம் ஆதல், திருத்தொண்டில் இன்பம் ஆதல் ஆகிய அனைத்து உலகிற்கும் பொதுவான கொள்கைகளையே பெரியபுராணம் அடியவர் வாயிலாக எடுத்துக்காட்டுகின்றது. பௌத்தராகப் பிறந்தவராயினும், சாக்கிய நாயனார், சிவநெறியே மெய்நெறி எள்று உணர்த்துகின்றார். புறத்தே புத்த சமயத்தவரைப்போல நடித்து, அகத்தே சிவபெருமானை வழிபட்டு வருகின்றார். கற்களையே மலராக எண்ணித் தினந்தோரும் சிவலிங்கத்தின் மீது கல் எறிந்து வழிபடுவதையே தம் நெறியாகக் கொண்டு வாழ்கின்றார். இறைவனும் இதனை அன்பின் செயல் என ஏற்றுக்கொண்டார்.

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்என்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவள்
தன்னைமிடும் அன்பினால் மறவாமை தலைநிற்பார்"

என அவரது அன்பு நிலையை எடுத்துக்காட்டுகிறார். "நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே மஞ்சனநீர், பூஜைகொள்ள வாராய் பராபரமே" என்று தாயுமானவர் குறிப்பிடுவதுபோல் சிவன் மீது கொண்ட அன்பே நெறியாக வாழ்ந்தார் அவர்.

காடவர்கோன் கழற்சிங்கநாயனார் சிவபெருமானுக்காக ஒரு கற்றளிக் கோயிலைக் கட்டி, இறைவனை எழுந்தருளச் செய்ய நாள் குறிக்கின்றார். அதே போல், திருநின்றவூரில் வாழ்ந்துவரும் பூசலார்நாயனாரும், தமது மனதில் படிப்படியாக ஒரு கோயிலைக் கட்டுகிறார். அண்டர்நாயகன் தங்குவதற்குரிய நாளையும் குறிக்கின்றார்.

காடவர்கோன் குறித்த நாளும் பூசலார் குறித்த நாளும் ஒன்றுபடும்போது, காடவர்கோன் கட்டிய கற்றளிக்கோயிலிலும், பூசலார் நாயனார் கட்டிய மனக்கோயிலே சிறப்புடையது என்பதைக் காட்டுவதன் மூலம், பதவி, செல்வம் ஆகிய இவற்றிலும் அன்பு, அருள் என்னும் பண்புகளே சிறந்தவை எனக் காட்டிவிடுகிறார்.

குறிக்கோள் நெறி

நல்லதொரு குறிக்கோளை வரையறுத்துக் கொண்டு, அக்குறிக்கோளை நெகிழ விடாமல், உயிர் போனாலும் அதைக் காப்பாற்றுவது என்று வாழ்கின்ற மனநிலையே உயர்ந்த மனநிலை ஆகும். அக்குறிக்கோள் சிவபெருமானை எங்கும் கண்டு வழிபடுகின்ற வகையில், சிவனுக்கும், சிவனடியார்க்கும் ஏதேனும் ஒரு வகையில் தொண்டு செய்து வாழ்ந்தனர்.

'பிள்ளைக் கனியமுது' எனப் பாடினார் பாரதியார்; பிள்ளைக்கறியமுது சமைத்துத் தரப்படவேண்டும் எனக்கூறிய சிவனடியாருக்குத் தம் குழந்தையையே சமைத்துத் தந்தார் சிறுத்தொண்ட நாயனார். 'அல்லிலாயினும் விருந்துவரின் உவக்கும்' என்று இரவு நேரத்தில், கொட்டும் மழையில் நனைந்து, பசியுடன் வந்த சிவனடியார்க்குத் தம்மிடம் எந்தப்பொருளும் இல்லாத சூழலிலும், காலையில் விதைத்த விதைநெல்லை வயலிலிருந்து கொண்டுவந்து, குற்றிச் சோறாக்கி, வீட்டுத்தோட்டத்தில் உள்ள கீரையையே பலவகையாகச் சமைத்து உணவு பரிமாறினார் இளையான்குடிமாறன் நாயனார். தம்மிடம் உள்ள ஒன்றை இல்லை என்னாது வழங்கிய இயற்பகை நாயனாரிடம், சிவனடியார், அவரது மனைவியையே வேண்டுமிடத்து அவரையும் அளித்தார் இயற்பகை நாயனார்.

உழவாரப் படையைத் தோளில் தூக்கிக்கொண்டு, கோயில்கள் தோறும் சென்று, கோயிலைத் தூய்மைப்படுத்தி 'என்கடன் பணிசெய்து

கிடப்பதே' என்று பணிபுரிந்தார் திருநாவுக்கரசு நாயனார். அவர் வழியைப் பின்பற்றி, தாம் அமைத்த அறச்சாலை, நூலகம், சோலை என அனைத்துக்கும் திருநாவுக்கரசர் பெயரையே அமைத்துத் தொண்டு புரிந்தார் அப்பூதி அடிகளார். கண்தெரியாத நிலையிலும், கயிற்றைக்கட்டி அதைப் பிடித்துக்கொண்டே சென்று, குளத்தில் இறங்கித் தூரெடுத்துத் தொண்டாற்றினார் தண்டிஅடிகள், மனைவியின் தாலியைவிற்றுக் குங்குலியம் வாங்கிப் புகைத்துப் பணியாற்றினார் குங்குலியக் கலய நாயனார். மதுரையில் உள்ள சோமசுந்தரக்கடவுளுக்குச் சந்தனம் அரைத்துக் கொடுத்துப் பணிபுரிந்தார் மூர்த்தி நாயனார். இறைவனுக்கு மலர் பறித்து வழிபட்டுத் தொண்டு புரிந்தார் சிவகாமியாண்டார் நாயனார்.

அடியவர்க்கு மண் ஓடு செய்து வழங்கும் நெறியில் நின்றார் திருநீலகண்ட நாயனார். சிறு கோவணத்தை வழங்கித் தொண்டு செய்தார் அமர்நீதி நாயனார். அடியவரின் துணியை வெளுத்துக்கொடுத்துப் பணிபுரிந்தார் திருக்குறிப்புத் தொண்ட நாயனார். மாடுகள் இன்புறப் பாடித் தொண்டு புரிந்தார் ஆனாயநாயனார். திருஞானசம்பந்தருடன் அவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் சென்று அவர் பாடும் பாடல்களுக்குப் பண் அமைத்துப் பாடித் தொண்டு செய்தார் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார். வறுமையுற்ற நிலையிலும் புல்லை வெட்டி விற்று இறைவனுக்கு நெய்விளக்கேற்றித் தொண்டு செய்தார் கணம்புல்ல நாயனார். நெய்கிடைக்காத நிலையில் புல்லையே விளக்காக எரித்தார். அதுவும் கிடைக்காத நிலையில் தம் தலைமுடியையே எரித்து விளக்கொளி ஏற்படுத்தினார். கலிய நாயனாரும் இத்தகைய விளக்கேற்றும் பணியில், எண்ணை கிடைக்கத் தடை ஏற்பட்டபோது தம் குருதியையே ஊற்றி விளக்கேற்றவும் துணிந்தார். சந்தனக் கட்டைகள் கிடைக்காத போது தம் கைகளே தேய்ந்து எலும்புகள் வெளிப்படும் வண்ணம் பணிபுரிந்தார் மூர்த்திநாயனார்.

திருவீழிமிழலையில் கொடிய பஞ்சம் ஏற்பட்டபோது திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் இறைவனை வணங்கிப் படிக்காசு பெற்றுக் கஞ்சித்தொட்டி அமைத்துப் பணிபுரிந்தனர். மேலும் திருமறைக்காட்டில் வேதங்களால் அடைக்கப்பட்ட கோயில் திறக்கவும் அடைக்கவும் பாடி, அக்கோயிலை மக்கள் வழிபாட்டிற்கெனத் திறந்து விட்டனர் அவ்விருவரும்.

'படமாடக் கோயில் பரமற்கு ஒன்றுஈயில்
நடமாடுங் கோயில் நம்பற்கு ஆகா
நடமாடுங் கோயில் நம்பற்கு ஒன்று ஈயின்அது
படமாடுங் கோயில் பரமர்க் கும்ஆம்'

என்று திருமூலர் குறிப்பிடுவதுபோல், 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனத் தொண்டு செய்து வாழ்ந்தனர் சிவனடியார்கள். இங்ஙனம் இறைத்தொண்டில் ஒரு குறிக்கோளுடன் வாழ்ந்த நாயன்மார்கள், அத்தொண்டில் இடையூறுகளும், தடைகளும் நேர்ந்தவிடத்து அவற்றைப் பொருட்படுத்தாது எதிர்கொண்டு தம் உயிரை ஈந்தேனும் தம் குறிக்கோள் நெறியில் உறுதியுடன் நின்றனர். எவ்விதக் குறியெதிர்ப்பு மில்லாமல் திருவருளையே முன்னிட்டு இவ்வடியார்கள் செய்த தொண்டுதாம், நாம் இச்சமுதாயத்தில் கடைபிடிக்க வேண்டிய ஒன்று என்பதையே பெரியபுராணம் வலியுறுத்திக் கூறுகிறது. இன்று அரிமா சங்கங்களும், சுழற்சங்கங்களும், செஞ்சிலுவைச் சங்கங்களும் மற்றும் பல்வேறு சமூக நிறுவனங்களும் தோன்றித் தொண்டாற்றுவதற்கு ஓர் அடிப்படையை அமைத்துத் தந்திருப்பது இப்பெரியபுராணம் ஆகும்.

பெரியபுராணம் சமய நூல் மட்டுமன்று, சமுதாய நூலும் கூட. அது ஒரு புதுமைக்காப்பியம் மட்டுமன்று, புரட்சிக்காப்பியமும் ஆகும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் வள்ளுவர் வாய்மொழியை மெய்ப்பித்துக் காட்டுவது பெரியபுராணம்; 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் திருமூலர் வாக்கைச் செயல்படுத்துவது பெரியபுராணம்; சாதி, சமயங்களைக் கடந்து அன்பும், தொண்டுமே சமுதாயத்திற்கு - அதில் வாழும் மக்களுக்கு இரு கண்கள் எனக் காட்டுவது பெரியபுராணம்.

# மகாகவி பாரதியாரின் சுயசரிதை

முனைவர் தெ. திருஞானமூர்த்தி

மகாகவி பாரதியார் எழுதித் தாமே வெளியிட்ட பத்து நூல்களுள் 'கனவு'ம் ஒன்று. இந்நூலை 1910இல் புதுச்சேரியிலிருந்து பாரதியார் வெளியிட்டுள்ளார். இதில் மொத்தம் 49பாடல்கள் உள்ளன. 1 முதல் 48 வரையிலான பாடல்கள் எண்சீர் விருத்தத்திலும் 49 ஆம் பாடல் எழுசீர் விருத்தத்திலும் அமைந்துள்ளன. 1911 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்நூல் பிரிட்டிசு அரசுக்கு எதிரானது எனத் தடைவிதிக்கப்பட்டு நூல்களையும் பறிமுதல் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது. பிரிட்டிசு அரசுக்கு எதிரானது என்பதை விளக்க இந்நூலில் 21 முதல் 29 வரையிலான பாடல்களையும் 33ஆம் பாடலில் 2-4 வரிகளையும் 39 ஆம் பாடலில் 3-4 வரிகளையும் 46 ஆம் பாடலில் கடைசி 4வரிகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அனுப்பியிருந்தனர். இப்பகுதிகள் பாரதியின் தன்னுணர்வு நாட்டுணர்வோடு ஒன்றியிருந்தமையை விளக்கி நிற்கின்றன. 1937க்குப் பின்னர் பாரதி பிரசுராலயம் 'கனவு' நூலை 'ஸ்வசரிதை' எனப் பெயர் மாற்றம் செய்து வேறு சில பாடல்களையும் சேர்த்து மீண்டும் வெளியிட்டது. தடைவரும் என்ற அச்சமே தலைப்பு மாற்றத்திற்கு அடிப்படைக் காரணமாகும்.

பாரதியாரின் சுயசரிதை உலகத்தியல்பு, இளமைக்காதல், ஆங்கிலக்கல்வி, குழந்தை மணம், தந்தையாரின் வாழ்க்கைக் கண்ணோட்டம், அவர்தம் வாழ்நிலை நெருக்கடி ஆகியனவற்றை விளக்கி நிற்கின்றது.

உலகத்தியல்பு:

"பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய்
மெல்லப் போனதுவே"

என்ற பட்டினத்தார் பாடல் அடிகளை நூலின் முன்னுரையாகக் கொண்டு திகழ்கிறது பாரதியின் சுயசரிதை. இவ்வடிகள் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பற்றிய விவரிப்பு என்ற முறையிலேதான் பாரதியாரால் எடுத்தாளப்பட்டுள்ளன. மெய்ஞ்ஞானம் உணர்த்தவே நிலையாமை பேசுதல் தொல்காப்பிய மரபு. இம்மரபு நெறியினின்றும் பிறழாத பார்வை பாரதியின் வாழ்க்கைப் பார்வையாகும். பாரதியின் வாழ்க்கைக் கண்ணோட்டம் பட்டினத்தாரின் வாழ்க்கைக் கண்ணோட்டத்தினின்றும் மாறுபட்டது. வாழ்வு முற்றும் கனவு என்பது ஒரு பாதி உண்மையே. மீதி உண்மையை அவர் சுயசரிதையே விளக்கி நிற்கிறது. பட்டினத்தாரின் வாழ்வையும் வாழ்க்கையும் கொண்டு உலக மாந்தரின் நிலையையும் தந்தையின் வாக்வையும் மதிப்பீடு செய்யும் பாரதி தன் நிலையைச் சுயசரிதை எங்கும் தெளிவுபடுத்தியுள்ளமையை அறியலாம்.

1910 இல் புதுவையில் அரவிந்தரோடு பாரதியார் கொண்ட தொடர்பு அவர்தம் ஆன்மீக நோக்கை மேலும் ஒளி கொள்ளச்செய்தது. ஆன்மீகமாக இருந்தாலும் சித்தர் நெறியாக இருந்தாலும் பாரதி எவற்றையும் அவ்வாறே ஏற்றுக்கொண்டவர் இல்லை. இந்த மாநிலம் பயனுறவும் இந்த வாழ்க்கையை இன்பமாக வாழவும் விழைந்தவர் பாரதி. உடம்பை இகழ்ந்தவரோ அல்லது இவ்வுலக வாழ்க்கையினின்றும் உள்ளத்தைத் துறந்தவரோ அல்லர் பாரதியார். இவ்வடிப்படைகளைக் கொண்டவையே சுயசரிதையில் இடம்பெறும் நிலையாமை பற்றிய பாடல்களாகும்.

உலகெ லாமோர் பெருங்கன வஃதுளே
உண்டு றங்கி யிடர்செய்து செத்திடும்
கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கையோர்
கனவி னுங்கன வாகு மிதனிடை . (பா.3)

மாதரார் தரும் இனிய மயக்கம் போன்றது இவ்வாழ்வு என்கிறார் பாரதியார். ஆகவே பாரதியாரின் பார்வையில் உலகும் வாழ்வும் நிலையில்லாதவை என்றாலும் இன்னாதவை அல்ல.

## இளமைப்பருவமும் காதலும்:

ஐந்து வயதிலேயே பாரதியார் தாயை இழந்தார். தந்தைக்கு அஞ்சி மற்ற குழந்தைகளைப் போல் கூடி, ஓடி, ஆடி, பாடி மகிழவில்லை. மாறாக நூற்களையே தோழமையாகக்கொண்டு வருந்தினார் என்ற செய்திகளைச் சுயசரிதை தெளிவுபடுத்துகின்றது. தம் பத்தாம் வயதில் மென்னடையள், கருவிழியள், நறுமலர் மேனியள் ஆகிய தெய்வத்தை ஒத்த பெண்ணொருத்தியைக் கண்டு காதல் கொள்கிறார். ஒன்பது வயதுப் பெண்ணாகிய அவள் சாகுந்தலையைப் போன்றிருந்தாள். அவளைக் கண்டு நான் காதல் வெறிகொண்டேன் என்கிறார்.

அன்பெ னும்பெரு வெள்ள மிழுக்குமேல்
அதனை யாவர் பிழைத்திட வல்லரே? (பா. 6)

எனத் தாம் கொண்ட காதல் தப்பமுடியாத காதல் என்றும் மாசில்லாத காதல் என்றும் கூறுகிறார். கன்னியின் காதலுக்காக ஆவல் கொண்ட பொழுதில் அவளும் என்னைக் காதலித்தாள். கைக்கிளைக்காதல் இன்னாதது. ஆனால் யான் கொண்ட காதல் அமுதம் போன்றது. இக்காதலில் தெய்வ நாட்கள் சில கழிந்தன. தேசபக்தர் வரவினைக் காத்தல் போல் அவள் வரவிற்காக நான் காத்திருந்து அவள் அழகில் ஆழ்ந்து மகிழ்ந்திருந்தேன். ஒரு நாள் சங்கரன் ஆலயத்தில் என் நெற்றியில் திலகமிட்டாள். புலனழிந்து நான் புத்துயிர் பெற்றேன் எனத் தம் காதலை நினைவுகூர்கிறார் பாரதி. இக்காதல் பாரதிக்குக் கைகூடவில்லை என்பதை அவர்தம் சுயசரிதை புலப்படுத்துகின்றது.

## ஆங்கிலக் கல்வி:

இளமைப்பருவத்தில் காதல் உணர்வால் ஆனந்தித்த பாரதி தந்தையின் விருப்பப்படி ஆங்கிலக்கல்வி பயிலத் திருநெல்வேலி சென்றார். விடுதலை வேட்கை மிக்க பாரதியின் இதயம் ஆங்கிலக்கல்வியை ஏற்க மறுத்தது. பாரதியின் இவ்வெதிர்ப்புணர்வுகளைச் சுயசரிதை பரக்கப் பேசுகின்றது. இப்பகுதிகளைக் காரணங்காட்டியே அப்போதைய பிரிட்டிசு அரசு 'கனவு' நூலைத் தடை செய்தது.

ஆங்கிலக்கல்வியை ஊனர் கலைத்திறன், அல்லல் மிக்கதோர் மண்படுகல்வி; ஆரியர்க்கு அருவறுப்பான கல்வி, உணவினைப் பெரிதென எண்ணும் அடிமைகள், பேடியர் கல்வி என்றும் விளக்குகின்றார். இக்கல்வியைப் பெறத் தந்தை என்னைப் பணித்தனன். தந்தையின் இச்செயல் சிங்கக்குட்டியைப் புல்லை உண் என்பது போலவும் பார்ப்பானை ஊன் விலை வாணிகம் செய் என்பது போலவும் இருந்தது என்கிறார் மகாகவி.

ஆங்கில வழி கற்போர் ஆழ்ந்திருக்கும் கவியுளமும் காணார்; நம் பெருமைமிக்கப் பாரம்பரியத்தையும் அறியார்; பாராண்ட நம் அரசர்களின் அறம் உணரார்; தீமையை வென்ற நம் முன்னோர்களில் வீரமும் அறியார்;

முன்னம் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளி னிகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள். (பா. 26)

என விளக்குகின்றார். வரலாற்றுப் பார்வையற்ற அறிவுக் குருடர்களாகவும் அடிமைநிலை எதிர்த்துப் போராடும் துணிச்சலற்ற கோழைகளாகவும் திகழ்வர். மேலும் பின்னர் நாடுறும் பெருமையும் தேர்ந்து கொள்ள இயலாத தற்குறிகளாகவும் அவர்கள் விளங்குவர் என எச்சரிக்கின்றார் மகாகவி. எந்தை எனக்கு நலம் செய்வதாக எண்ணியே,

“ஏதி லார்தருங் கல்விப் படுகுழி
ஏறி யுய்தற் கரிய கொடும்பிலம்” (பா.27)

வாதும் பொய்மையும் என்ற விலங்கினம் வாழும் வெங்குகைக்கு என்னை அனுப்பினார் என வருந்துகின்றார். ஆங்கிலக்கல்வியால் உடல் சோர்ந்து, விழி குழிவெய்தி நான் வீறிழந்தேன்; உள்ளம் நொய்ந்து ஐயம் பெருகி, சுதந்திரம் நீங்கி அறிவுக்கடலுள் துரும்பென அலைந்தேன் என்கிறார்.

செலவு தந்தைக்கோ ராயிரஞ் சென்றது
தீதெ னக்குப்பல் லாயிரஞ் சேர்ந்தன

நலமொ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை

நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன் (பா.29)

முன்செய்த நல்வினையாலும் உலகு புரக்கும் பராசக்தியின் அருளினாலும் அயலவர் கல்விப்படுகுழி வீழ்ந்து நான் அழியாது காக்கப்பட்டேன் என்கிறார்.

காதலற்ற மணம்:

பாரதியார் தம் பன்னிரண்டாம் வயதில் தந்தைக்கு அஞ்சி காதலித்த பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளாது செல்லம்மாவை மணந்து கொள்கின்றார். இந்த மனத்துன்பம் அவரை மிகுதியும் வருத்தியுள்ளது.

உலகோர் பேரின்பம் அடைய இயலா நிலையைப் பேரின்பம் என்றும் இழிந்த பொருளைப் பொருள் என்றும் மணமற்ற செய்கையை மணமென்றும் எண்ணி மயங்குகின்றனர். அன்பு கலவாத குழந்தை மணத்தைப் பாரதியார் வன்மையாகக் கண்டிக்கிறார்.

"பால ருந்து மதலையர் தம்மையே

பாத கக்கொடும் பாதகப் பாதகர்

மூலத் தோடு குலங்கெடல் நாடிய

மூட மூடநிர் மூடப் புலையர்தாம்

கோல மாக மணத்திடைக் கட்டுமிக

கொலையெ னுஞ்செய லொன்றினை யுள்ளவும்

சால வின்னுமோ ராயிர மாண்டிவர்,

தாத ராகி யழிகெனத் தோன்றுமே". (பா.34)

எனத் தம் உள்ளக்குமுறலை வெளிப்படுத்துகின்றார். காதலற்ற மணத்திலும் பிரம்மச்சரியம் மேல், நல்ல பசிக்குப் புலையர் விற்றிடும் கள் எவ்வாறு உணவாகாதோ அதுபோலக் காதலற்ற மணம் வாழ்வுக்குப் பயன்தராது, ஆண்மை வேண்டின் காதல் மணம் செய்க என்கிறார் மகாகவி.

மாய்ந்தி டாத நிறைந்த விருப்பமே

கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்

கண்ணி லாதவர் போலத் திகைப்பர்காண் (பா.13)

எனப் பேசும் பாரதி மூத்தவர் செயலுக்காக நெஞ்சம் வருந்துகின்றார்.

மூத்த வர்வெறும் வேடத்தி னிற்குங்கால்
மூடப் பிள்ளை யறமெவ னோர்வதே?

எனத் தந்தை செயலை மறுத்துரைக்க மாட்டாது கலங்குகின்றார்.

**தந்தையின் வாழ்க்கைக் கண்ணோட்டமும், மகாகவியும்:**

அறிவுக் களஞ்சியத்தின் காவலர்களாக இருக்க வேண்டிய பார்ப்பனர்கள் கலியுகத்தில் குலவொழுக்கம் கெட்டழிய முப்பொழுதும் பொருள் செய்வதொன்றனையே நோக்காகக் கொண்டனர். எந்தையும் பொருளாசையால் பலப்பல வாணிகம் செய்தார். நீர்ப்படு சிறு புற்புதர் மாயுமாறு போலப் பொருளாசையால் ஆற்றல் குன்றித் தளர்ந்தார். தீய மாயவுலகிடை ஒன்றின் மீது கொள்ளும் பேரவா அவர்களை மாய்ப்பது திண்ணம். என் தந்தையும்,

நாசக் காசினி லாசையை நாட்டினன்
நல்ல னெந்தை துயர்க்கடல் வீழ்ந்தனன். (பா.42)

என்கிறார். பொருள் இல்லார் பொருள் செய்தல் முதற்கடன். ஆனால் பொருளையே எண்ணி உயிர்விடுதல் மடமை ஆகும் என்கிறார் மகாகவி.

தந்தையின் இறப்புக்குப் பின்னர் மகாகவியை வறுமை சூழ்ந்தது. அஞ்சாதே என்று சொல்ல உறவும் இல்லை. சிந்தையில் தெளிவும் இல்லை. உடலில் வலிமையும் இல்லை. மாந்தர் பால் பொருள் போக்கிக் கற்ற ஆங்கிலக் கல்வியால் எள்ளளவும் பயனில்லை. வாழ்வுக்கு வழிகாட்டும் எல்லா மார்க்கங்களும் தோற்றன. ஏன் பிறந்தேன் இத்துயர் நாட்டிலே என ஆற்றாது புலம்புகிறார் மகாகவி.

சக்தியைச் சரணடைதல்:

பையப் பைய ஆமை மலையேறுதல் போல் உலகத்து உண்மைகளையும் நான் பையப்பைய உணர்தல் வேண்டுமா? அனுபவங்களால் வாழ்க்கையை உணர்ந்துகொள் என்ற நின் சித்தம்

நின் திருவருட்குப் பொருந்தியதா? எனச் சக்தியிடம் வினவுகின்றார்.

உலகமே ஒரு பெருங்கனவு. இதில் சென்றதை எண்ணிச் சிந்தை செய்வதால் என்ன பயன்? வானத்து மீனை நாடித் தூண்டில் வீசும் என் நிலையை யான் மறவேன். என்றாலும்,

ஆன தாவ தனைத்தையுஞ் செய்ததோர்
அன்னை யேயினி யேனு மருள்வையால் (பா. 48)

எனப் பராசக்தியைச் சரணடைகின்றார் பாரதி. சக்தியைச் சரணடைந்ததால் பாரதியின் அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, உள்ளத்தில் அன்பு வெள்ளம், புலன்களில் புத்துணர்வு, கருமயோகத்திலே நாட்டம் இவையெல்லாம் மிகுகின்றன. இவை என்றும் தன்னுள் நிலைக்க அவர் சக்தியை வேண்டி நிற்கின்றார்.

பாரதியின் சுயசரிதை முழுமையான அவர்தம் வாழ்க்கை நிகழ்வுகள் அனைத்தையும் கொண்டிருக்கவில்லை என்றாலும் அவர் வாழ்வின் முழுமையைக் கோடிட்டுக் காட்டிச் செல்கின்றது. மகாகவியின் சுயசரிதை ஒரு தனிமனிதரின் வாழ்க்கை வரலாறு மட்டுமன்று ஓர் தேசத்தின் வரலாறாகவும் நீட்சி பெற்றுள்ளது. சுய சரிதையில் பாரதி கையாண்டுள்ள உவமைகள் கற்போர்க்குத் தெளிவையும் மகிழ்ச்சியையும் அளிக்கும் ஆற்றல் மிக்கவை.

நில்லா உலகில் நிலை கொள்ளும் நாளில் துக்கப் புலம்பலாக வாழாமல் இன்பமே இவ்வாழ்வின் நோக்கம் என்பதை உணர்ந்து வாழ்க என்கிறார் மகாகவி. தம் மரபு, பண்பாடு, கலை, இலக்கியங்கள், முன்னோர் பெருமை, நிகழ்கால நிலைமை இவை உணர்த்தாத ஆங்கிலக்கல்வி ஏறி உய்தற்கரிய கொடும்பிலம் என்பது இன்றைக்கு மட்டுமன்று என்றைக்கும் உண்மையாகும். காதலால் வாழும் நாட்கள் தெய்வநாட்கள்; இவ்வுலக வாழ்வு தெய்வக் கனவை ஒத்த அமுத வாழ்வு என்பவையே பாரதி சுயசரிதைவழி உலகுக்கு உணர்த்தும் அனுபவப் பாடங்களாகும்.

# மறக்கப்பட்ட மனித நேயம்!

சு.கு. பன்னீர் செல்வம்

சிந்தனைகளையும், அதனைச் சார்ந்த செயல்களையும் வட்டாரத் தன்மை கொண்டவை, உலகளாவிய தன்மை கொண்டவை என இருவகையாகப் பிரிக்கலாம். முன்னது கடந்த காலத்திற்கும் பின்னது எதிர்காலத்திற்கும் பொருத்தமானவை. இன்றைய நவீன உலகம் சுருங்கிவிட்டது என்பதை ஏற்றுக் கொண்ட நாம் நமது செயல்களையும் திட்டங்களையும் கூடச் சுருக்கிக்கொண்டே இருக்கிறோம். நமது அவலம் என்னவென்றால் அனாவசியமான விஷயங்களைப் பற்றிப் பேசுகிறோம்; அவசியமானதை அலட்சியப்படுத்துகிறோம். அரசியல்வாதிகளின் திசைதிருப்பும் அறிக்கைகளை அசைபோடுகிறோம்.

கோடிக்கணக்கான மக்கள் இன்றைய உலகில் பசி, பிணியால் துன்புறும்போது புதிய உலகம், பொன்னுலகு என்றெல்லாம் பேசுவது விந்தையல்லவா! "வாய்பேசாத மக்களும், காதுகேளாத அரசுகளும் உள்ளவரை இது சாத்தியமில்லை" என்று மூதறிஞர் ராஜாஜி கூறியது இன்றுவரை பொருத்தமானதே! உலகம் முழுவதும் 80 கோடிப்பேர் பட்டினியால் வாழ்வதாக ஐ.நா. உணவு மற்றும் வேளாண் அமைப்பு கூறுகிறது. ஆப்பிரிக்க நாடுகளான எத்தியோப்பியா, தான்சானியா, ருவாண்டா, புரூன்டி, எரித்தீயா, சோமாலியா, சூடான், கென்யா, உகாண்டா ஆகிய நாடுகளில் உணவுப்பஞ்சத்தால் 1.6 கோடி மக்கள் வாழ்கிறார்கள். வளரும் நாடுகளில் மூன்றில் இருபங்கு அளவுக்கு இன்று எய்ட்ஸ் நோயில் பாதிக்கப்பட்டுள்ளவர்களை, உலகக்கோப்பை (களு)க்குச் செலவிடும் பணத்தைக் கொண்டு குணப்படுத்த முடியும்! இன்றைய உலகில் ஏழ்மையில் உள்ள 130 கோடி மக்களில் 31.5 கோடி மக்கள் இந்தியாவைச் சார்ந்தவர்கள் என்பது எவ்வளவு வெட்கப்பட வேண்டிய செய்தி!

இந்திய மாநிலங்களில் நிர்வாகத்திற்கும், தொழில்நுட்பப் புரட்சிக்கும் புகழ்பெற்றுள்ள ஆந்திரமாநிலத்திற்கு அழியாத களங்கத்தைப் பதித்த சம்பவம் ஒன்று ஒரே நாளில் "அகில உலகப்புகழைப்" பெற்றுத்தந்துள்ளது. ரெண்டசிந்தலா என்ற கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் தங்களது சிறுநீரகங்களை விற்றுள்ளனர். விற்பதற்குக் காரணம்? வறுமை! வறுமை, எந்தச் செயலுக்கும் தாயாக அமையும் என்பதற்கு இச்சம்பவம் ஓர் உதாரணம்.

நமது விண்வெளிச் சாதனை, அணுவெடிச் சோதனை, தொழில் நுட்பப்புரட்சி போன்ற அனைத்தையும், மங்கச் செய்யக்கூடிய சக்தி உடையது வறுமை! "இந்தியா ஏழை நாடல்ல" என இந்தியாவிற்கு வந்த அதிபர் கிளின்டன் சொன்னதைத் தலைப்புச் செய்தியாக்கி அலங்கரித்த நமது தகவல் தொடர்புச் சாதனங்கள் 35.7 சதவிதம் (சுமார் 32 கோடி) மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கிறார்கள் என்பதைத் தற்காலிகமாக மறைத்தன அல்லது மறந்தன. வறுமையை ஒழிப்பதற்குத் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியை ஓர் ஆயுதமாக்கிட முடியும் என்ற கிளின்டனின் கூற்றை நம்மால் அவ்வளவு எளிதில் ஏற்க முடியாது. நாடெல்லாம் கணினி இன்டர்நெட் வசதி பெருகிவருகிறது என்பது உண்மையே. ஆனால் இதைவிடக் கிராமங்களில் குடிநீர் வசதி, சாலை, சுகாதாரம், அடிப்படைக்கல்வி ஆகியவற்றிற்கு முன்னுரிமையை முதன்மையாக்கிட வேண்டும்.

நமது தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது என்பது உண்மையே! அது போலவே அண்டை நாடுகளில் நாம் வாங்கிய கடன்களும்! ஆண்டு தோறும் 1.02 லட்சம் கோடி ரூபாயை வட்டியாக மட்டும் செலுத்துகிறோம். "வட்டி செலுத்தவே நமது வாழ்நாள்" என்று புதிய கோஷம் வராது என்பதற்கு எந்த உத்திரவாதமும் கூறமுடியாது!.

புதியபோர் நெறி

நம் நாட்டில் அறிவியல் தொழில்நுட்பங்கள் நவீனத்துடன் வளர்ந்துள்ளது, வளர்கிறது. அதுபோல மனித ஆயுள் வளராது

குறைந்து வருவதற்குக் காரணம் ஏழைநாடுகளுக்கும், பணக்கார நாடுகளுக்கும் இடையில் உள்ள இடைவெளிதான். ஹிட்லரின் சர்வாதிகாரம் கொடிகட்டிப் பறந்தபோது ஆயிரக்கணக்கான யூதர்களைப் பலிகடாவாக்கி, அறிவியல் பரிசோதனைகள் நடைபெற்றன என்பதை அவ்வளவு எளிதில் மறந்து விடாது இந்த உலகம். இன்றைய நவீன உலகத்தின் உயிரோட்டமே தொழில்நுட்ப ரீதியிலான மேலாதிக்கத்தில்தான் அடங்கியுள்ளது. முதலில் எதிரியின் நவீனத் தொழில் நுட்பத்தை அழித்துவிட்டால் பின் சமபலமில்லாத போட்டியில் தான் வைத்ததே சட்டம் என்பதுதான் புதிய போர் நெறி! இன்றைய நவீன தொழில் நுட்ப உலகம் இதைநோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறது. “போருக்குப்பின் இறந்தவர்களைப்பார்த்து உயிருடன் இருப்பவர்கள் பொறாமைப்படுவார்கள்” என்று அணு ஆயுதப்போரின் விளைவை ஒரே வரியில் முன்னாள் சோவியத் யூனியனின் அன்றைய பிரதமர் குருசேவ் கூறியதை எண்ணிப்பார்த்தால் அதன் கொடூரம் புரியும். அணுகுண்டு பாதித்த பகுதியில் புல், பூண்டு முளைக்கவே பல ஆண்டுகள் ஆகும். இந்தப் பிராந்தியத்தில் ஓர் அணு ஆயுதப்போர் மூளுமானால் முடிவில் அதன் வெற்றியைக் கொண்டாட ஒரு இந்தியனோ, ஒரு பாகிஸ்தானியோ உயிருடன் இருக்கப் போவதில்லை.

ஏட்டிக்குப்போட்டி

ஒப்பந்தங்களை உண்டாக்கும் நமக்கு அதற்கு ஒப்ப, பந்தமாக நடக்கத் தெரியவில்லை, தெரிந்தும் நடப்பதில்லை. விரிவான அணு ஆயுதச் சோதனைத் தடை ஒப்பந்தம்(Comprehensive Test Ban Treaty) சி.டி.பி.டி யும், அணுஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் (Nuclear Non-Proliferation Treaty) என்.பி.டி.யும் இந்த வகையின. எந்த நாடும், சமுதாயமும், மற்ற நாடுகள் மீது ஆதிக்கம் சுரண்டல் இவற்றை விடுத்துச் சகிப்புத்தன்மை, சமாதானம், சகவாழ்வு ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டும். இதற்கு அமைக்கப்பட்ட சி.டி.பி.டி ஒப்பந்தம் இன்று “ஏட்டிக்குப் போட்டியாக” உள்ளது. பேரழிவை உண்டாக்கும் ஆயுதங்களை உலகிலிருந்து முற்றிலுமாக ஒழிக்கப் புதிய உலக நியதியை

உண்டாக்கும் வகையில் இது இல்லை என்பதை உரத்த குரலில் முதலில் வெளிச்சம் போட்டு உலகிற்குக் காட்டியது இந்தியா மட்டுமே.

தேவை - தெளிவான திட்டம்:

அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், சீனா ஆகிய வல்லரசுகள் தங்களிடமுள்ள அணு ஆயுதங்கள் அனைத்தையும் அழிக்கக் காலக்கெடுவுடன் கூடிய ஒரு செயல் திட்டத்தை அறிவித்தால்தான் சி.டி.பி.டி.யில் கையெழுத்திட முடியும் என்ற நமது கோரிக்கையில் என்ன தவறு உள்ளது? மேலும் இந்த ஒப்பந்தத்தில் தெளிவற்ற கொள்கைகளும் உள்ளன. சி.டி.பி.டி. ஒப்பந்தம், அணு ஆயுத சோதனை நடத்துவதைத்தான் தடை செய்கிறது. கையெழுத்திட்ட நாடு அணுஆயுதம் வைத்திருப்பது பற்றியோ, அல்லது புதிய ஆயுதங்களைத் தயாரிப்பது குறித்தோ இவ்வுடன்பாட்டில் எதுவும் குறிப்பிடப்படவில்லை! இது, ஐந்து அணு ஆயுத நாடுகளுக்கும் தெரியாமலில்லை. அணு ஆயுதங்களைத் தயாரிப்பதையோ, வைத்திருப்பதையோ கைவிடத் தயாராக இல்லை. அதே சமயம் மற்ற நாடுகள் அணு ஆயுதங்கள் தயாரிப்பதை இவை விரும்பவில்லை.

இந்த உலகைப் பலமுறை அழிக்கக்கூடிய அளவுக்கு அணு ஆயுதங்கள் இந்த ஐந்து வல்லரசுகளிடமும் உள்ளன. கடலிலும், நிலத்தடியிலும் இதுவரையில் நடந்த 2054 அணு ஆயுதச் சோதனைகளில் அமெரிக்கா நடத்தியது மட்டும் 1032. அதோடு மட்டுமின்றி, பூமிக்கடியில் சோதனை செய்யாமலேயே தனது அணு ஆயுதங்களின் வீரியம் குறையவில்லை என்று நிர்ணயிப்பதற்கும், ஆற்றலை அதிகரிப்பதற்கும் ஆய்வுக்கூடத்தில் கணினி மூலம் அமெரிக்கா ஆராய்ச்சி செய்து வருகிறது. அணுஆயுதச் சோதனைகளைத் தடை செய்ய வேண்டும் என அமெரிக்கா பிடிவாதமாக இருக்கக் காரணம் சோதனைகள் நடத்தாமலேயே தன்னால் அந்த நிலைமைகளைச் செயற்கையாக உருவாக்கிக் (Simulation) கணினியால் அவற்றைக் கணக்கிட முடியும் என்ற தைரியத்தில்தான். ஆனால் நடந்தது என்ன? உபதேசம் எல்லாம் ஊருக்கு மட்டும், அறிவுரையெல்லாம் அடுத்தவனுக்கு மட்டுமே என்பது

போல அமைந்துவிட்டது அமெரிக்காவின் நிலை. அமெரிக்க (காங்கிரஸ்)ப் பாராளுமன்றம் சி.டி.பி.டி. ஒப்பந்தத்தை 1999 ஆம் ஆண்டு அக்டோபர் 13ம் தேதி நிராகரித்துவிட்டது.

செனட்டில் பெரும்பான்மையாக இருந்த குடியரசுக்கட்சியினர் இதனைத் தொடக்கம் முதலே எதிர்த்து வந்துள்ளனர். அரசுத் தரப்பில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் 51-48 என்ற வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. தீர்மானம் நிறைவேற மூன்றில் இருபங்கு அதாவது 67 வாக்குகள் தேவை. சி.டி.பி.டி. யில் அமெரிக்கா கையெழுத்திடுவதற்கு எதிராக அதன் செனட் வாக்களித்துள்ளதற்கு ஐ.நா. தனது ஏமாற்றத்தைத் தெரிவித்துள்ளது. அணுஆயுதமற்ற உலகத்தை உருவாக்க வேண்டும் என்ற இலட்சியம் நம் முன்னுள்ள நிலையில், இதனை எதிர்த்து அமெரிக்க செனட் வாக்களித்துள்ளது மிகவும் வேதனையான செயல். அணு ஆயுதங்களை ஒழிக்கும் முயற்சிக்கு இது பின்னடைவு. அமெரிக்கா மீது பிற நாடுகள் கொண்டுள்ள நம்பகத்தன்மை இதன் மூலம் பாதிக்கப்படும் என்பது வெளிப்டையான உண்மை!

அணு ஆயுதம் தயாரிப்பவர்களுக்கு இது ஊக்கமளிக்கும். நேட்டோ அமைப்பிலுள்ள அடிப்படைக் கருத்து வேறுபாட்டை இது அம்பலப்படுத்துவதாக அமைந்துள்ளது. "கிடப்பதெல்லாம் கிடக்கட்டும் கிழவியைத் தூக்கி மனையில் வை" என்பது போல உலகத்தின் ஆபத்பாந்தவன் தானே என்பதைக் காட்டிக் கொள்ளும் அமெரிக்கா, தன் மீது எதிரி நாடுகள் ஏவுகணைகளை ஏவினால் அதைப்பற்றி எச்சரிக்கை செய்து, உஷார் படுத்தும் சாதனங்களைக் கொண்ட, சுமார் 1100 கோடி ரூபாய் மதிப்புள்ள செயற்கைக்கோளை அண்மையில் ஏவியது. ஈரான், ஈராக், வடகொரியா ஆகிய நாடுகளிடமிருந்து "அச்சுறுத்தல்" உள்ளது என்று இதற்கு "வலுவான" காரணத்தைக் கூறுகிறது. இத்தகைய அமைப்பைக்கொண்ட சாதனத்தை நிறுவிட 6000 கோடி டாலர்கள் செலவாகும்! இந்தாண்டு இதற்கான பணியைத் தொடங்கினால்தான் 2005ல் முடியும்.

1972ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தை மீறும் செயலிது. இதனால் புதிய ஆயுதப்போட்டி துவங்க வழி ஏற்படும் என ரஷியாவும், சீனாவும்

இதைக் கடுமையாக எதிர்க்கின்றன. ஆனால் இத்திட்டத்தை அன்றைய கிளின்டன் அரசு நிறுத்தவில்லை. காரணம் இதை நிறுத்தினால் தனது குடியரசுக்கட்சி வேட்பாளர் அல்கோரின் வெற்றி வாய்ப்பு பாதிக்கலாம் எனக் கருதியது. அதோடு ஜனநாயகக் கட்சியினர் தம்மீது குறைகூற வாய்ப்பாக இது அமைந்துவிடும் என்பதைக் கிளிண்டன் உணர்ந்திருந்தார். தற்போதைய அதிபர் ஜீனியர் புஷ் இந்தப் புதிய உளவறியும் ஏவுகணைத்திட்டத்திற்குத் தம் அரசு தடை செய்யாது எனத் தெளிவுபடுத்திவிட்டார். இதன் மூலம் சி.டி.பி.டி. தொடர்பான அமெரிக்காவின் தெளிவற்ற அல்லது பாரபட்சமான கொள்கையை எளிதில் உணரலாம்.

சி.டி.பி.டி யை 1996ல் ஐ.நா.பேரவை அங்கீகரித்தது. அணு உலை அல்லது அணுசக்தித் திட்டங்களை வைத்திருக்கும் 44 நாடுகளும் ஒப்புதல் அளித்தால்தான் அமலுக்கு வரும். இந்த ஒப்பந்தம் அமலுக்கு வந்தால் இதை அங்கீகரித்த எந்த நாடும் அணுகுண்டுச்சோதனை நடத்த முடியாது. இதனை பிரான்ஸ், ஜப்பான், ரஷியா, சீனா ஆகியவை உட்பட 26 நாடுகள் அங்கீகரித்துள்ளன. ஆனால் அமெரிக்க செனட் சபை இதை நிராகரித்துள்ளது. ஒப்பந்தத்தில் அணு வல்லரசு நாடுகளுக்குச் சாதகமான பல நிலைகள் உள்ளதை ஏற்க இந்தியா தயாராக இல்லை. இந்தியா கையெழுத்திடாததைக் காரணம் காட்டிப் பாகிஸ்தானும் கையெழுத்திடவில்லை.

தாங்கள் ஆதரிக்கும் நிலையில் ஒப்பந்தம் இல்லாத போதும் பொருளாதார உதவிகள் உள்ளிட்ட பல்வேறு நிர்பந்தங்கள் காரணமாக அதை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தில் பல நாடுகள் உள்ளன. அதே நேரத்தில் எத்தகைய நிர்பந்தங்களையும் சமாளிக்கக் கூடிய நிலையில் உள்ள இந்தியா மேற்கொண்டுள்ள நிலையை அந்த நாடுகள் புரிந்து கொண்டுள்ளன. இதன் மூலம் மூன்றாம் உலக நாடுகளுக்குத் தலைமையேற்று வழி நடத்திச் செல்லும் தகுதியை உலக மக்கள் தொகையில் ஆறில் ஒரு பகுதியைக் கொண்ட இந்தியா பெற்றுள்ளது. வளம் மிகுந்த எதிர்கால உலக சமுதாயத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதில் வழிகாட்டும் தலைமை நாடுகளின் வரிசையில் இந்தியாவும் ஒன்று என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில்

அணு வல்லரசுகளுடன் ஆறாவதாகத் தன்னை இணைத்துக் கொள்ள இந்தியாவால் முடியாது. காரணம் "அணு வல்லரசு" என்ற அந்தஸ்த்தைப் பெற சர்வதேச அணுவிசை ஏஜென்சி ஒரு வரையறையை வைத்துள்ளது. அதன்படி 1967 ஜனவரிக்கு முன் அணுகுண்டுச் சோதனை நடத்தியிருந்தால் மட்டுமே அணுவல்லரசு என்ற தகுதியைப் பெற முடியும் என அணு ஆயுத ஒப்பந்தத்தின் 9வது ஷரத்து கூறுகிறது. மேலும் 1967க்கு முன்னால் அணு ஆயுத நாடாக இல்லாத எந்த நாட்டுக்கும், அணு ஆயுதங்களை உருவாக்கக் கூடிய சாதனங்கள், ஆற்றல்கள், நுட்பங்களை அணு ஆயுத நாடுகள் கொடுக்கக்கூடாது என்பதே என்.பி.டி.யின் ஒப்பந்தம். அதே சமயம் அணு ஆயுத சக்தி உள்ள நாடு இந்தியா என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

1986 ஏப்ரல் செர்னோபில் அணு உலை விபத்து அன்றைய சோவியத் யூனியனை மட்டுமின்றி, ஐரோப்பாவிலிருந்த 20 நாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தியது. 15 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் இறந்தனர். 50 ஆயிரத்திற்கும் அதிகமானோர் உடல் ஊனமுற்றனர். செர்னோபிலிருந்து காற்றுமூலமாகப் பரவிய கதிரியக்கப் பொருட்கள் ஸ்விடன் நாட்டுக் காடுகளில் மேய்ந்த மான்களின் உடலிலும் கதிரியக்கம் பரவியது. நீண்ட தூரம் செல்லும் பறவைகளின் மூலமாக இந்தியாவிற்குக் கூட அந்தக் கதிரியக்கம் வந்ததாகக் கூறப்படுகிறது. மின்சார உற்பத்திக்காக மட்டும் அமைக்கப்பட்ட அணு உலை விபத்தின் பாதிப்புகளே இத்தனை நாடுகளைத் தாண்டிச் சென்றதென்றால், அழிப்பதற்கென்றே தயாரிக்கப்படும் அணுகுண்டுகளின் பாதிப்புகள் எத்தனை நாடுகளைப் பாதிக்கும்? இதற்குப்பிறகு தனது நாட்டிலுள்ள 19 அணுமின் நிலையங்களை மூடிவிட ஜெர்மனி அரசு முடிவெடுத்துள்ளது. இந்த முடிவு சுற்றுச்சூழல் ஆதரவு இயக்கங்களுக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதப்படுகிறது. ஐரோப்பாவில் உற்பத்தியாகும் மொத்த மின் உற்பத்தியில் ஜெர்மனியின் பங்கு மட்டும் மூன்றில் ஒரு பங்காகும். மறுபுறத்தில், உலகிலுள்ள 435 அணு உலைகள் புளூடோனியம், கடும் விஷம் கொண்ட அமெரிகியம், நியூரியம், நெப்டூனியம், ஸ்டுரோன்டியம் மற்றும் ஐயோடின் கலந்த கழிவுகளை உற்பத்தி செய்து வருகின்றன.

உலகின் முதல் அணுகுண்டு வெடித்து 55 ஆண்டுகளாகின்றன. ஹிரோஷிமாவில் விழுந்த அணுகுண்டு 300 மீட்டர் ஆரத்திலிருந்த அனைத்தையும் மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், மின் கம்பங்கள் அனைத்தும் உருகக்கூட நேரமில்லாமல் ஆவியாகிவிட்டன. அதிர்வில் பல்லாயிரக்கணக்கான கட்டிடங்கள் தரைமட்டமாயின.

அணுஆயுத சோதனைத் தடையும், பரவல் தடையும் வேண்டாம் என்பதன்று நமது நோக்கம். மக்களைக் கொன்று குவிக்கப் பயன்படும் ஆயுதங்களுக்கு ஆகும் செலவை மக்களின் நல்வாழ்விற்குப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் இந்தியாவின் உறுதியான முடிவு. நமது பாதுகாப்புச் சூழ்நிலை அவ்வப்போது மாறக்கூடியது. அதைப்பொறுத்தே இந்தியாவின் பாதுகாப்புத் தேவைகளும் மாறுகின்றன. இன்றைய சூழலில் சி.டி.பி.டி. ஒப்பந்தம் மிகுந்த பாரபட்சத்துடன் இருப்பதால் அதில் கையெழுத்திடக்கூடாது என்று மத்திய அரசை, விஞ்ஞானிகள் நிர்பந்தித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவின் பாதுகாப்பிற்கு எது உகந்தது என்பதை இந்தியாதான் முடிவு செய்யவேண்டுமே தவிர அந்நியரல்லர். இது இந்தியாவின் இறையாண்மைக்கு உட்பட்டது.

பேரழிவை உண்டாக்கும் ஆயுதங்களை அழிப்போம் என்பது வெறும் அலங்கார வார்த்தைகளாக இனியும் இருந்துவிட முடியாது. உலகம் சுருங்கிக்கொண்டு வரும் இந்நாளில் பழமை வாதம், வன்முறை, மதவிரோதம், பயங்கர வாதம் ஆகியவற்றுக்கு இடமில்லை. "காலங்காலமாக மனித இனம் பேணி வந்த உன்னத உணர்வுகளை அணுகுண்டு மரத்துப்போகச் செய்துவிட்டது" என்ற மகாத்மா காந்திஜியின் உணர்வுகளை அணு வல்லரசு நாடுகளுக்குக் குறிப்பாக, அமெரிக்காவிற்கு உணர்த்தவேண்டும். ஏனெனில் உலக வரலாற்றில் ஒரு போரின் வெற்றிக்குப்பின் ஆயுதங்களை நிராகரித்து அமைதிக்காகவும், அஹிம்சைக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அந்த அசோகப் பேரரசைப் பெற்றது நாம் தானே!

# தருமபுர ஆதீனப் பன்னிரு திருமுறை வெளியீடு - ஒரு பார்வை II

- வித்துவான் தா. குருசாமிதேசிகர்

முன்னுரை :

'பண்சுமந்தபாடல்' என்று மூவர் தேவாரத் "திருவாசகம்' பாராட்டுகிறது. திருமுறைப்பாடல்கள் என்ற மூவர் தேவாரம் இசையோடு கோயில்களில் ஓதுவாமூர்த்திகளால் இன்றும் ஓதப்படுகின்றன. எனினும் உரைகாணும் முயற்சி மேற் கொள்ளாமலேயே பாடிப் பரவப்பட்டன தேவாரப்பாடல்கள். 'சொல்லிய பாட்டின் பொருளுணர்தல்' வலியுறுத்தப்பட்டும் 'உரனுடையார்' மட்டுமே உணர்ந்து பொருள் கண்டனர். சில பாடல்கள் சாத்திரமாக மலர்ந்தன. ஞானநூல்களுக்கு உரை எழுதப் பலரும் அஞ்சினர். திருவாசகத்திற்கு உரை எழுத வற்புறுத்திய அன்பர் ஒருவரைக் கோபித்துக் காவிரியில் விழுந்து உயிர் விடுவேன் என்று, குடந்தை தியாகராசச் செட்டியார் கூறிய வரலாறு உ.வே.சா கூற்றால் அறியலாம்.

உரைமலர்தல் :

காலம் செல்லச்செல்ல 'மரபுவழி' அவ்வெண்ணம் மாறியது. தான்தோன்றித்தனமாக உரைகாணாமல் - வைணவ மரபுபோல் 'ஈடுகள்' காணமுடியாவிடினும், தேவாரத்திற்குக் குறிப்புரையாவது வழங்கச் செய்யவேண்டும் என்று தருமையாதீனத்தின் 25வது குருமூர்த்திகள் திருவுளத்து எண்ணி, மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் மூலம் தேவாரத்தின் முதல் திருமுறை குறிப்புரையோடு மலரச் செய்து 1953-ல் வெளியீடு செய்தார்கள்.

முதல் திருமுறை :

திருஞானசம்பந்தர் அருளிய மூன்று திருமுறையில் முதல்

திருமுறையில் 135 பதிகங்கள் உள்ளன. இப்பதிகங்களில் உள்ள பண்முறைப்பாடல்கள் கீழ்கண்டவாறு உள்ளன. I. நட்டபாடைப் பண்கள் 22; II. தக்கராகப் பண்கள் 24; III. பழந்தக்கராகப் பண்கள் 16; IV. தக்கேசிப்பண்கள் 12; V. குறிஞ்சிப்பண்கள் 29; VI. வியாழக்குறிஞ்சிப்பண்கள் 25; VII. மேகராகக் குறிஞ்சிப்பண்கள் 7 இவ்வாறு 136 பதிகங்களுக்கும் உரை வழங்கிய தருமையாதீன நன்கொடை தண்டபாணிதேசிகர் மூலம் தமிழ் உலகம் பெற்றுள்ளது.

குறிப்புரைச் சிறப்பு :

'செந்தமிழ்ப் பரமாசாரிய மூர்த்தி' எனச் சிறப்பிக்கப்பெறும் தருமையாதீன 26வது குருமூர்த்திகள் இப்பொழுது அருட்செங்கோல் செலுத்துபவர்கள். அவர்களின் அருளிப்பாடு தற்போது ஆசியுரையாக இரண்டாம் பதிப்பில் வழங்கிய செய்தியோடு உரையாசிரியர் சிறப்பைச் சிந்திக்கலாம்.

I. "இறைவன் ஒருவனே. அவன் தன்மையால் இருதிறப்படுவான்; இதனைத் திருஞானசம்பந்தர் தோடுடைய செவியன் என்றார். தோட்டை உடைய செவி அம்மைக்குரியது. அம்மையை இடப்பாகத்தே உடையவராதலின் 'தோடுடைய செவியன்' ஏன்று இறைவனை இருதன்மையோடு கூடிய ஓர் உருவாகவே கூறினார், இரண்டாவதாக அருளிய 'நறவம் நிறைவண்டு' என்று தொடங்கும் பதிகத்திலும் - இமையோர் ஏத்த உமையோடு இருந்தானே-எனப் பெருமானை இருதன்மை உடைய ஒருவனாகவே காட்டியுள்ளார். பொருள் ஒன்று. தன்மை இரண்டு என்பதைத் தெரிவித்தார். சூரியனும் அதன் கதிரும்போல், சிவமும் சத்தியாய்ப் பிரிப்பின்றி ஒரே பொருளாய் இருதன்மை உடையதாம். இது சொரூப நிலை அல்லது தன்னிலை என்பர்"

II. தடத்தநிலை : சிவப்பரம்பொருள் தன்னை நோக்க ஒன்றாயும் உலகமுகப்படும்போது பலவாயும் பயன்படுகிறது. பரமசிவம்,

பராசக்தி பூரணமாயிருந்தும் செயல்படாமல் ஒன்றாயும், இருதன்மைப்பட்டும் இருக்கிறது. அச்சிவப்பரம்பொருள் 'தயாமூலதன்மம்' என்றும், தத்துவத்தின் வழிநின்று பராசக்தியை நோக்க, அப்பராசக்தி தன்னிலையினின்றும் இறங்கி ஆதிசக்தியாய், தன் சக்தியில் பலகோடியில் ஒருகூறு சக்தியாய், அயன், அரி, அரன் என்னும் முதல் மூவரைப் படைத்து, முத்தொழிலைச் செய்விக்கிறது. இதுவே 'தடத்த நிலை'யாகும். இதனை ஞானசம்பந்தர் 'ஒரு விண் முதல் பூதலம் படைத்து அளித்து, அழிப்ப - மும்மூர்த்திகளாயினை' என்றார். இத்தடத்தநிலை 'சிறப்புநிலை' என்றும் அழைக்கப்படும்" என்ற ஆசிரிய உரை இக்கால அறிஞர்கள் அறியத்தக்க செய்தியாகும். இஃது குருமொழிகளாகும்.

## முதல் திருமுறை குறிப்புரைமாட்சி :

இனி, மகாவித்துவான் முதல் திருமுறையில் வெளியிட்ட அரிய குறிப்புரை மாட்சிகளை வரிசையாகச் சிந்திக்கலாம்.

I. தோடுடைய செவியன் : ஒவ்வொரு பதிகமும் தொடங்கப்படும் முன்பு அப்பதிகம் தோன்றிய வரலாற்றைத் திருத்தொண்டர் புராணத்தை ஒட்டியும், பதிகப்பாடல்களை உட்கொண்டும் குறிப்புரை தொடங்குகிறது.

II. 'தோடுடைய செவியன்' என்பது முதலாக உள்ளங்கவர்ந்த கள்வனுடைய 'சிறப்பியல்புகள்' தெரிவிக்கப் பெறுகின்றன.

III. 'தோடுடைய செவி' என்றதால், இடப்பாகத்துச் செவி என்பது குறிக்கப் பெறுகின்றது. கருணைக்கேற்றது; தாய் தழீஇய இடப்பக்கமாதலின் அதனை முற்கூறினார்.

IV. இது ஞானதேசிகனது திருவருட்டிறத்தை விளக்குவது. சொரூப சிவம் மூவகை ஆன்மாக்களுக்கும் மூவகையால் அநுக்கிரகித்து

மும்மலங்களையும் போக்கி அருளாரமுதத்தை உண்பித்தருளும் முறையில் சகலான்மாக்களுக்குப் படர்க்கையில் தோன்றிப் புரியும் குருவருளைக் குறிப்பதாகும். இப்பாடல் நாயகநாயகித் தன்மையுடையது.

V. பிறர் கூற்று உடன்பாடு : 'மலரான்' என்பது பிரமனைக் குறியாது என்றும், 'சம்பந்தரே' முற்காலத்து ஏடுடையமலரால் பூசித்த காரணம் பற்றி இங்ஙனம் கூறினார் என்ற சதாசிவச்செட்டியார் கூற்று உரையில் ஏற்கப்படுகிறது. அச்செட்டியார் இப்பாடலில் ஐந்தொழிலும் உள்ளதை விளக்குவதுபோல் ஏற்கிறார்.

VI. செப்பறைச் சுவாமிகள் : 'தோடுடைய செவியன்' முதலாயின இறைவனது, எண் குணங்களை உணர்த்துவன என்றும், 'பிரமாபுரம்', 'விடையேறி' முதலியன இறைவனது தசாங்கங்களைக் குறிப்பால் உணர்த்துவன என்றும், 'விடையேறி', 'பொடிபூசி' என்பதோடு 'உள்ளங்கவர்கள்வன்' என்பனவும், இறைவனுடைய மூன்று திருமேனிகளாகிய உருவம், அருவம், அருவுருவம் என்பவற்றைக் குறிப்பன என்றும் எழுதியுள்ளதைத் தேசிகர் குறிப்புரையில் ஏற்கிறார்.

VII. தோடுடைய செவியே 'ஓம்' என்ற பிரணவ சொரூபம் -என்பர்.

VIII. மறுப்பு : 'ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்தேத்த அருள்செய்த பீடுடைய பிரமாபுரம்' - என்ற தொடர் பிரமன் பூசித்து அருள் பெற்றதையே குறிக்கும். இதை 'சேவுயரும் திண்பொடியலன் திருவடியே சரண்'- என்று நான்முகன் தான் வழிபட்ட நலங்கொள்கோயில்- என்று பிள்ளையார் மற்றொருபதிகத்தில் அருளுவதால், ஞானசம்பந்தர் 'ஏடுடைய மலரால்'தான் - வழிபட்டு அருள்பெற்றதாகக் கூறல் முறையாகாது' என்று தேசிகர் சதாசிவச் செட்டியார் கருத்தை மறுப்பது அறியத்தக்கது.

IX. தேவாரத்திற்கும், வேதத்திற்கும் உள்ள ஒற்றுமையை உணர்த்த

வேதம் பயின்ற மரபில் வந்து தமிழ்வேதம் தந்த பிள்ளையார், காயத்ரி மந்திரத்தின் முதல் எழுத்தாகிய தகரத்தின்மீது பிரணவத்தின் முதலெழுத்தாகிய ஓம்காரத்தைச் சேர்த்துத் தொடங்கியிருப்பது அறிந்து இன்புறற்குரியது - என்ற குறிப்புரை - முதல் பாடலின் தொகுப்பாகும்.

X. 'கற்றல் கேட்டல் உடையார் கழல் கையால் தொழுதேத்த' - என்ற தேவார வரிக்கு உரிய குறிப்புரை : கற்றல் - உலக நூல்களைக் கற்றுத் தருக்குவதன்று, இறைவன் புகழையே கற்று அடங்கல், கேட்டலும் - அவ்வண்ணமே. இறைவன் புகழையன்றி வேறொன்றையுங் கல்லாத - கேளாத பெரியோர்களாலேயே இறைவன் தொழிற்குரியன் - என அதிகாரிகளை அறிவித்தவாறு. உலகக் கணத்தால் சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் முதலியனவும் கொள்ளப்பெறும்.

XI. 'துயர் இலங்கும் உலகு' - என்ற எட்டாம் பாட்டுவரிக் குறிப்புரை சிந்திக்கத்தக்கது :

துன்பம் விளங்குகின்ற கன்மபூமி. இதனைத் துன்ப உலகு என்றது வினை வயத்தான் மாறித் துய்க்கப்படும் இன்ப துன்பங்களுள் இன்பக் களிப்பைக்காட்டிலும் துன்பக்கலக்கம் மிகுந்து தோன்றுதலின் - என்ற உரைக்குறிப்பும், 'இறைவன்' பல ஊழிகளை விளைவிப்பது ஆன்மாக்களின் மலம் பரிபாகம் ஆதல் பொருட்டு - என்ற விளக்கமும் காணத்தக்கன.

XII. 'புறங்கூற' - என்ற தேவாரச் சொல்லுக்கு நேர்நின்று சொல்ல மாட்டாமையாலே மறைவான இடத்தில் எளிமையாய்ச் சொல்ல என்ற குறிப்புரை மெச்சத்தக்கது.

XIII. 'திருநெறியதமிழ்' - சிவநெறியாகிய அருநெறியையுடைய தமிழ். தொல்வினை - பழமையாகியவினை: ஆகாமிய சஞ்சிதங்கள். பழவினை நீக்கமே இப்பதிகப் பயன் - என்றும், அருநெறியும்

பெருநெறியும் ஒரு நெறியே - அது 'திருநெறி' என்றும் உணர்த்தினர் என்ற குறிப்புரை ஊழ்வினை நீக்கத்திற்கு வழிகாட்டுவதாகும்.

நுட்பமான உரை :

I. கண்டியூரை வணங்கிய பிள்ளையார் அங்கிருந்து திருச்சோற்றுத் துறை செல்லும் வழியில் அருளிய பதிகத்தைச் சேக்கிழார் 'ஒப்பில்வண்தமிழ்மாலை' என்பர். இப்பதிகத்தில் 'ஒளிவெண்ணீற்றப்பர்' உறையும் செல்வம் உடையார் நாமமாகிய 'தொலையாச் செல்வர்' என்பது தோற்றுவிக்கப் படுகிறது என்பது நுட்ப உரை.

II. பதிகத்தில் சொல்லப்பட்டவற்றைச் சுருக்கி உரைத்தல், பதிகப்பாடல் ஒவ்வொன்றையும் சுருக்கமாக உரைத்தல் தேசிகர் இயல்பு.

(அ) அருள்பெற்றுச் சிறிது திருந்திப் பதவியில் நிற்பாரும் பதவிமோகத்தால் மயங்குவர். ஆயினும் அதுதான் ஆன்ம இயல்பு எனத் திருவுளங்கொண்ட கருணையாளன் எனத் திருவாரூர் 'துள்ளும்' என்ற தேவாரப் பாடலுக்கு விளக்கம் தருகிறார்.

(ஆ) 'பிறப்பு' - பாவம் பற்றியது, பாவமோ பற்றுள்ளம் காரணமாக எழுவது, காரியமாகிய பிறப்பினை அறுக்க விரும்புவார்க்குத் துறவியாதலே சிறந்த உபாயம் என்கிறது. அப்பாடல்;

*'பிறவி அறுப்பீர்காள் - அறவன் ஆரூரை*
*மறவாது ஏத்துமின் - துறவியாகுமே! '*

- என்ற குறிப்புரையும் பாடலும் அறியத்தக்கது.

(இ) "அண்ணாமலை நாடான் அரூர் உறையம்மான்

கண்ணார் கடல் நாகைக் காரோணத்தானே"

என்ற பிள்ளையார் தேவார வரிக்குத் தேசிகர் வழங்கும் குறிப்புரை சிவபரத்துவம் நாட்டுவது. திருமாலின் தருக்கொழித்த தலங்கள் மூன்றினையும் சேர்த்துக் கூறியருளினார்; திருவாரூரில் வில்நாணைச் செல்லாக அரித்து நிமிர்த்தித் திருமால் சிரத்தையிடறினார். திருவண்ணாமலையில் தீமலையாய் நின்று செருக்கடக்கினார். நாகையிலும் தியாகர் திருவுருவில் இருந்து திருமாலின் தியானவஸ்துவானார் என்பதாம் - என்ற குறிப்புரை புராண வரலாறு விளக்குவது.

(ஈ) "செம்பொன்புன்னை கொடுக்கும் புறவம்" என்ற தேவார வரிக்கு புன்னைமரங்கள் மகரந்தங்களாகிய செம்பொன்னைக் கொடுக்கும் சீர்காழி: மரங்களும் வள்ளன்மை செய்யும் நகரம் என அவ்வூர் மக்களின் வள்ளன்மையைச் சுட்டியது - என்ற குறிப்புரை நுட்பமிக்கது.

உள்ளுறை விளக்கம் :

I. *'பாலொடு நெய்தயிரும் பயின்றாடும் பரமேட்டி'* என்ற திருவாரூர் வரிக்கு பஞ்சகாவியத்துள் மூன்றே கூறினார். இவையே ஆடுதற்குரியன கோசல கோமயம் நீக்கி, மோரும் வெண்ணையும் கொள்வார் இனம்பற்றி அவ்விரண்டும் கொள்க - என்ற குறிப்புரை அறியாப் பொருளை அறிவிப்பது.

II. *'தமிழ்ச்சொலும் வடசொலும் தாள் நிழல்சேர'* - என்ற அச்சிறு பாக்கத் தேவார வரிக்கு, ஒலிவடிவாய சொற்கள் யாவும் இறைவனிடமிருந்தே தோன்றியனவாதலின் அடையுமிடமும் அவன் அடிகளே ஆயின - என்ற குறிப்புரை சமனிலை காட்டுவது.

III. *'முனிவரொடு அமரர்கள் முறைவணங்க'* என்ற இடைமருது தேவார வரிக்கு, முனிவர்கள் வணக்கம் உலகுய்ய வந்த நிஷ்காமிய வணக்கம், தேவர்கள் வணக்கம் அசுரர் அழியத் தாம்வாழ வேண்டும் - என்னும் காமிய வணக்கமாதலின்

அவர்கள் முன்னும் தேவர்கள் பின்னும் வணங்க - என்ற குறிப்புரை வணங்கும் வரிசை கிளந்து காட்டும்.

IV. 'யார்க்கும் நண்ணல் அரிய நள்ளாறு' என்ற தேவார வரிக்கு: 'எவர்க்கும் அணுகமுடியாத நள்ளாறு என்றது' நாடிழந்தும், நகரிழந்தும், மனைவியையிழந்தும், உருமாரியும் வினையை நுகர்ந்து கழித்த நளன் போன்றோர் அன்றி வினைச் சேடமுடைய எவரும் நணுக முடியாத நள்ளாறு' என்ற உரைவிளக்கம் உண்மை நெறி காட்டுவது.

V. 'ஆயாதன சமயம்பல' என்ற வீழிமிழலைத் தேவார வரிக்கு இறை உண்மையையும், இறை இலக்கணத்தையும் அளவையானும், அநுபவத்தானும் உள்ளவாறு ஆராயதனவாகிய சைவம் ஒழிந்த ஏனைய சமயம்-என்ற விளக்கம் ஆய்வுரையாகும்.

VI. 'மலர்மிசை எழுதரு பொருள்' என்ற சிவபுரத் தேவார வரிக்கு, 'பிரமரந்தரத்தின் கண்ணதாகிய சகஸ்ரதளத்தை உடைய தாமரை மலர்மேல் எழுந்தருளியிருக்கும் பேரொளிப் பிழம்பாகிய பொருள்' - என்ற உரை மெய்ப்பொருள் காட்டுவது.

## அருஞ்சொற்பொருள்

I. "நாடவல்லமலரான் மாலுமாய்த் தேட" என்ற திருப்புன்கூர்த் தேவாரச் சொற்றொடருக்கு, பிரமன் நான்முகங்களால் உடையவன். ஏனைத் தேவர் போலத் திரும்பித் திரும்பித்தேட வேண்டிய அவசியம் இல்லை என்ற நகைச்சுவை தோன்றக் கூறியது; அதிலும் துணையாகத் தன் தந்தையையுஞ் சேர்த்துக் கொண்டு தேடினான் என அச்சுவையை மிகுத்தவாறு - என்ற குறிப்புரை நகைச்சுவை காட்டுவது.

II. "தீப மனத்தார்" எழுதிய தீபம் போல நிலைத்த மனத்து அடியார்கள்.

III. சென்றடையாத திரு - நல்வினைப் போகம் காரணமாக ஆன்மாக்களுக்கு வருவதுபோல, வந்து அடையாத இயற்கையே ஆன திரு.

IV. 'ஒடுங்கும்பிணி' - தமக்குரிய பருவம் வருந்துணையும் வெளிப்படாதே ஒடுங்கி இருக்கும் நோய்.

V. குன்றாத்தமிழ் - எஞ்ஞான்றும் திருவருள் குறையாத தமிழ் என்பன போன்ற அருஞ்சொற்பொருள்கள் அரிய உண்மைகள் தெரிவிப்பன. ஒருசிலவே விளக்கப்பட்டன.

முடிவுரை :

ஆன்ம போதம் கழன்று சிவபோதத்தில் நிற்பார் சொல்லுவன யாவும், சிவத்து உரையே ஆதலின், 'எனதுரை தனதுரையாக' என்று குறிப்புரை வழங்கும் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், தருமையாதீன ஞானப்பண்ணை மூலமாக வழங்கிய முதல் திருமுறைக் குறிப்புரைகள் இப்போது பொழிப்புரையோடும் வெளியிடப் பட்டுள்ளது. இவ்வரிய குறிப்புரையையும் சேர்த்து வெளியிட்டு அருளுகின்ற நம் குருமகாசந்நிதானத்திற்குத் தமிழ் உலகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. அடியேன்கள் எவ்வாறும் இதற்குக் கைம்மாறு செய்ய முடியாது.

# ஓர் இயற்றமிழ் மாணவனின் கல்வெட்டுப் பார்வை - 1

அ.மா. பரிமணம்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அதனால் சங்க காலத்திலும் அதனை அடுத்த காலங்களிலும் தோன்றிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, இரட்டைக்காப்பியங்கள், கம்பராமாயணம், பெரியபுராணம் போல்வனவற்றை நம்மால் படிக்கமுடிகிறது. தமிழகத்தில் மேனாட்டார் தொடர்பில் அச்சுக்கலை இடம் பெற்ற பின்னர் எந்த நூலையும் எவர் வேண்டுமாயினும் பெற்றுப் பயன்கொள்ளும் நிலை உருவாகியது. இப்போது, வள்ளுவரின் திருக்குறள் ஏட்டினை நாமும், நம் கையிலுள்ள திருக்குறள் ஏட்டினை வள்ளுவரும் படிக்க முடியாத நிலை ஏற்பட்டதன் உண்மையை உணரலாம். தங்கள் கருத்துக்களை நிலை ஆவணப்படுத்த, பண்டைத்தமிழ் மக்கள் எழுது பொருளாகக் கொண்ட ஓலைச்சுவடி முறையால், அவ்வப்போது வழக்கிலுள்ள வரிவடிவில் பெயர்த்தெழுதப் பெற்றுக் காலந்தோறும் தொடர்ந்து பயிலப்பட்டு வரும் வாய்ப்பும், கல், செம்பு முதலியவற்றில் பொறிக்கப்பட்ட முறையால் அவை தோன்றிய காலத்துள்ள தமிழக வரலாறு, சமயம், பண்பாடு ஆகியவற்றை அக்கால எழுத்திலேயே அறிந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைத்துள்ளன. அகழ்வாய்வுகளில் கிடைக்கும் உலோகக்காசுகள், உடைந்த மட்பானைச்சில்லுகள், தாழிகள் போன்றன விரிவான வகையில் எழுத்துக்களைக் கொண்டிராமையால், மொழிபற்றி அறிந்துகொள்ள வாய்ப்புக் குறைவாகவும், வரலாறு முதலியன பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பு மிகுதியாகவும் உள்ளன.

திருக்கோயில்களின் சிறப்பினை-பெருமையினைப் பேச வந்த தலபுராணங்கள் அக்கோயில்களுக்குத் தேவர்கள் வந்து வழிபட்டுத்

தம்குறை நீங்கப் பெற்றனர் என்று கூறும் மரபுண்டு. அதனை நினைவு கூரும் வகையில் அங்குள்ள தீர்த்தங்களுக்கு அத்தேவர்கள் பெயர் இட்டுப் போற்றுவதும், திருச்சுற்றில் அத்தேவர்களுக்குச் சிலை அமைப்பதும் உண்டு. திருக்கோயிற் சுவர்களில் மண்டபத்தூண்கள் போன்றவற்றில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுக்களைப் படிக்க இயலாத நிலையில், அவற்றை வழிபடவந்த தேவர்கள் வரைந்து சென்ற எழுத்துக்களாகக் கருதியிருந்தனர் என்னும் கருத்தும் உளது. சிலர், அவை வெறும் கிறுக்கல்கள் எனக் கருதினர். அதனால் திருப்பணிகள் போன்ற செயல்களால் அவற்றிற்கு ஊறு நேர்ந்த நிலை உண்டு.

தமிழ் இலக்கியப் பெருமையை மேலைநாட்டவர் அறியச்செய்ய ஒரு போப்பையர் அமைந்தமைபோல, தமிழ்மொழியின் பெருமையை மொழியுலகு உணர ஒரு கால்டுவெல் அமைந்தமை போல, தமிழ்மொழிக்கு அகராதி கிடைக்க ஒரு வீரமாமுனிவர் தோன்றியது போலப் பழந்தமிழகத்தின் அரசியல், சமுதாய, சமய, பொருளியல் பெருமைகளைக் கல்வெட்டுக்கள் மூலமாக உணர்ந்துகொள்ள ஹுல்ட்சு, பூலர் போன்ற மேலைநாட்டுத் தொல்லியல் அறிஞர்கள் அமைந்தனர். அவர்களின் வழியில் திருவாளர்கள் வெங்கையா, கிருட்டிணசாத்திரி, கோபிநாத ராவ் போன்றவர் தோன்றலாயினர். தமிழக அரசின் தொல்லியல்துறை, சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறை, டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வுமையம் போல்வன தனி ஆய்வாளர்கள் தோன்றி இன்று உழைத்துவருவது ஆறுதலளிப்பதாக உள்ளது. இன்று திருக்கோயில் சுவர்களில் உள்ள எழுத்துக்கள் அனைவராலும் படிக்க இயலா விட்டாலும், இயன்றவர் படித்துணர்ந்து உண்மைகளைப் புலப்படுத்தும் ஆவணங்களாக உள்ளன. அவை தமிழ்மக்கள் உணர்ந்து பெருமிதமெய்தக்கூடிய ஆவணக் களஞ்சியங்கள் என்பதில் ஐயமின்று. எனினும் அவற்றின் பொருளை உணர்ந்த நிலையில் நாம் அறியவரும் சிலபல உண்மைகள் வேதனை தருவனவாக உள்ளன. அவற்றில் இரண்டொரு உண்மைகளைக் காட்டுவது ஏற்புடையதாகும்.

மாமன்னன் இராசராசன் தான் அமைத்த தஞ்சைப் பெருங்கோயில் உடையார் அருண்மிகு இராசராசேசுரமுடையாருக்குப் பொன்னாலும் மணிகளாலும் அமைக்கப்பட்ட மிகப்பல திருவாபரணங்களும், திருப்பரிகலன்களும் தெய்வத்திருமேனிகளும் வழங்கினான். திருக்கோயில் நித்திய நைமித்திகப் பூசைகள் நிரந்தரம் நடைபெறுவதற்காக ஏராளமான ஊர்களை நிவந்தமாக அளித்துள்ளான். அவற்றில் வகைக்கு ஒரு எடுத்துக்காட்டுத் தரப்படுகின்றது.

அணிகலன்

"பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்துவளையில் ஒன்று பொன் ஐங்கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜதேவர் ஸ்ரீ பாதபுஷ்பமாக அட்டித்திருவடி தொழுத இரண்டாந்தரத்து முத்திற்கோத்த முத்து வட்டமும், அனுவட்டமும், ஒப்பு முத்தும், குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியும் சக்கத்துங் குளிர்ந்த நீரும் சிவந்த நீருமுடைய முத்து முன்னூற்று ஐம்பத்து மூன்றினால் நிறை ஒன்பதின் கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியும் ஆக நிறை பதினைங் கழஞ்சேய் நாலு மஞ்சாடிக்கு விலை காசு இருபத்தைந்து"( S.I.I. Vol II No. 3)

பரிகலன்:

" நாள் முப்பத்து நாலினால் உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் சிறுநதத்துக் குடுத்த பொன்னின் தட்டம் ஒன்று ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை நாற்பதின் கழஞ்சேய் கால்"

(S.S.I. Vol II No.1)

" குடம் ஒன்று வெள்ளி தொளாயிரத்து ஐம்பத்திருகழஞ்சு குடம் ஒன்று வெள்ளி தொளாயிரத்து நாற்பத்து ஒன்பதின் கழஞ்சேய் முக்கால்"(S.I.I.Vol II. No.91)

திருமேனி:

"பஞ்ச தேஹ மூர்த்திகளில் பாதாதிகேசாந்தம் இருபத்திரு

விரலே நான்கு தோரை உசரத்து பத்து ஸ்ரீ ஹஸ்தங்கள் உடையாராக கனமாக எழுந்தருளு வித்த திருமேனி ஒருவர்"
(S.I.I.Vol II. No.30)

இவ்வாறெல்லாம் அளிக்கப்பெற்ற எண்ணிறந்த பொருட்களில் இன்று எதுவும் திருக்கோயிலில் இல்லை. இறகு முளைத்துப் பறந்தன போலும்! அளித்த ஊரும் வரவேண்டிய நில வருமானமும்:

"இந்நாட்டு வெண்கோன்குடிக் கண்டத்து மாகாணிகுடி அளந்தபடி நிலம் இருபத்து மூன்றரையே மூன்றுமா அரைக்காணிக் கீழ் காணி அரைக்காணிக் கீழ் மாவிலும், ஊரிருக்கையும் ஊர்க்களமும் இவ்வூர்க் காளர்பிடாரியார் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் பிடாரியாரிது தெங்குமரம் நின்ற நந்தாவனமும், இவ்வூரை ஊடறுத்துப் புறவூர்களுக்கு நீர்பாயும் வாய்க்காலாலும் ஈழச்சேரியும் வெள்ளான் சுடுகாடும் பறைச்சேரியும் ஆக இறையிலி நீங்கு நிலம் ஒன்பதுமா முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் ஒன்பதுமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்குமாநிலம் இருபத்து மூன்றே மூன்றுமா அரைக்காணிக்கீழ் அரையே ஒருமா அரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்கு மாவினால் இறைகட்டின காணிக்கடன் ராஜகேஸரியோ டொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல் இரண்டாயிரத்து முந்நூற்று ஒரு பத்து ஐங்கலனே குறுணி"(S.I.I. Vol. II. No.5)

இந்நிலமும் இது போன்று வழங்கப்பெற்ற எண்ணற்ற நிலங்களும் இன்றும் இடம் நகராமல் உரிய ஊர்களில் இருக்கின்றன. ஒருகால் ஊர்களின் பெயர்கள் வேறுபட்டிருக்கலாம். ஆனால் நிலத்தின் உரிமையும் அதன் வருவாயும் இராசராசேசுவர முடையாருக்கு இன்று இல்லை. உழுதவருக்கே நிலம் சொந்தம் என்னும் கோட்பாடு நடைமுறைப்பட்டது போலும்! அல்லது 'செல்லான் கிழவன் இருப்பின் நிலம் புலந்து இல்லாளின் ஊடிவிடும்' என்னும் குறளுக்கேற்ப நிலங்கள்

இறைவனோடு ஊடி விட்டன போலும்! வேதனை தரும் இதுபோலும் அவலங்களை அம்பலப்படுத்தவது இக்கட்டுரையின் நோக்கமன்று.

இக்காலத்தில் மக்கள் பேசும் மொழிகள் எழுதும் எழுத்துக்கள் ஆகியன விரைவாகவும் விரிவாகவும் வளர்ந்துவரும் அறிவியலின் ஒரு கூறாக ஆராயப்பெறுகின்றன. அதன் விளைவுகளுள் ஒன்று மொழி மனிதனால் படைக்கப்பட்டதேயாகும்; இறைவனால் படைக்கப் பட்டதன்று என்பதாகும். வடமொழியைப் பாணிக்கும் தென்மொழியை அகத்தியர்க்கும் கொல்லேற்றுப் பாகனார் அருளினார் என்பது போன்ற, மொழிகள் பற்றிய நம்பிக்கைகள் அடிபட்டுப்போயின. இக்காலமொழியியல் ஆய்வாளர்கள் சில அடிப்படை விதிகளை அமைத்துக்கொண்டு அனைத்து மொழிகளையும் ஆராயுங்கால் முடிவுகளில் சில மாறுபாடுகள் எழுவது இயற்கையாயிற்று. அதனை உளங்கொண்டு நோக்குங்கால் இந்திய மொழிகளுள் தமிழ்மொழி தொன்மைச்சிறப்பும் தனித்தன்மையும் கொண்டது என்னும் கருத்து டாக்டர் கால்டுவெல் அவர்களின் ஆய்வுமுடிவுக்குப் பின்னர் மொழியுலகில் அறிஞர் பலராலும் ஏற்கப்பெற்றது.

இச்சிறப்புக்குரிய காரணங்களில் முதலாவதாகக் கருதப்படுவது, கிடைத்துள்ள தமிழ் நூல்களில் முற்பட்டதாக அமைந்துள்ள தொல்காப்பியமேயாகும். அஃதோர் இலக்கண நூலாதலின், ‘இலக்கியம் கண்டு இலக்கணம் அமைக்கப்படும்’ மரபுபற்றி, அதற்குமுன்னரே தமிழில் பல இலக்கியங்கள் இருந்துள்ளதனை உணரலாம். நூலாசிரியராகிய தொல்காப்பியரே ‘என்மனார் புலவர்;’ ‘என்றிசினோரே’ என்றிங்ஙனம் கூறியுள்ளமையால் அவருக்கு முன்னர்ப் பல இலக்கணநூல்கள் இருந்துள்ளமையினையும் உணரலாம்.

அன்பு அச்சகம், மதுரை-1. ©741116